12th August 1960]

Ex-servicemen

* 128 *Q.*—SRI T. SAMPATH : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Co-operative Civil Engineering Society for disabled Ex-servicemen; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A co-operative society called "The Madras Ex-servicemen's Civil Engineering Workers' Co-operative Society, Limited" has been registered under the Madras Co-operative Societies Act, 1932, on 18th July 1960 and arrangements are being made to start its work soon. The object of the society shall be to promote the economic interests of the members of the society and to find suitable and profitable employment for them by obtaining contracts of work from Government public bodies, private bodies and individuals

SRI M. D. THIAGARAJA PILLAI : பத்து ஆண்டுகள், பன்னிரண்டு ஆண்டுகள் இராணுவத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றிருக்கிறார்கள், அல்லது நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு புறம்போக்கு நிலத்தை அடமானம் செய்வதில் அரசாங்கத்தின் கொள்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : இது தொழில் சம்பந்தபட்ட கேள்வி. அடமானம் செய்வதுபற்றி தனிக்கேள்வி போட்டால் எல்லா விவரமும் கொடுக்கப்படும்.

SRI K. B. S. MANI : ஸார், இந்த யூனியனில் எத்தனை பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள்? அதற்கான முதலீடு உதவி செய்ய எவ்வளவு ரூபாய் கொடுப்பதாக இருக்கிறது? நிர்வாகக் குழு எப்படி அமைக்கப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : இதன் மூலதனம் 5 லட்சம் ரூபாய். 50,000 ஷேர்கள் 10 ரூபாய் விதம் இருக்கும். இது பூராவும் மேஜர் ஜெனரல் கொச்சார் அவர்களுடைய முயற்சியில் ஏற்படுத்தப்பட்டது. ராஜ்ய சர்க்கார் விதிகளின் பிரகாரம் அதைப்போல 3 மடங்கு கடன் கொடுக்க ரிஸர்வ் பாங்கிலிருந்து வசதி செய்யப்படும். இன்னும் டைரக்டர்கள் யார் என்று போடவில்லை.

Choolaimedu Potters' Co-operative Society, Vellore

* 129 *Q.*—SRI M. P. SARATHI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் நகர சூளைமேடு மண்பாண்ட உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகத்தில் அடிக்கடித் தகராறுகள் நடந்துகொண்டு இருக்கின்றனவா?

(ஆ) அதன் நிர்வாகத்தை கவனிக்க உத்தியோக பூர்வமான அதிகாரி (Senior Inspector-Secretary) நியமிக்கப்பட்டுள்ளாரா?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) and (*b*) Yes, Sir.

SRI M. P. SARATHI : வேலூர் மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கம் சட்ட ரீதியாக அமைந்திருந்தாலும், தலைவரை துராக்கிரதமாக வெளியேற்றிவிட்டு, இருக்கப்பட்ட மெம்பர்கள் கமிட்டி அமைத்தது சர்க்காருக்குத் தெரியுமா ? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : வெளியே சென்று கமிட்டி அமைத்தது தெரியாது. ஆனால், அங்கிருக்கும் டைரக்டர்களுக்குள்ளே தகராறு இருந்த காரணத்தால், அரசாங்கத்திலிருந்து ஸீனியர் இன்ஸ்பெக்டர் ஒருவரைக் காரியதரிசியாக நியமனம் செய்து, இப்பொழுது சொஸைட்டி நடந்து வருகிறது.

Joint Commercial Tax Officer

* 131 *Q.*—SRI K. R. VISWANATHAN : Wil the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the *ad hoc* rules governing the temporary selection of Joint Commercial Tax Officers were communicated for the information of all Commercial Tax Departmental officers subordinate to the Board of Revenue;

(*b*) if so, the details thereof; and

(*c*) if not, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No *ad hoc* rules governing the temporary selection of Joint Commercial Tax Officers were issued.

(*b*) & (*c*) Do not arise.

* 132 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was any modification in the *ad hoc* rules governing the temporary selection of Joint Commercial Tax Officers when making regular selection of such officers; and

(*b*) whether the claims of candidates qualified up to the date of issue of the rules was considered for regular selection in consultation with the Madras Public Service Commission.

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No *ad hoc* rules governing the temporary selection of Joint Commercial Tax Officers were issued. The question of any modification to these *ad hoc* rules does not arise. Regular selection of Joint Commercial Tax Officers has also not yet been made.

(*b*) Does not arise.

Extraction of oil from bran

* 133 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அரிசி தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவ உத்தேசமுண்டா ?